

ராஜ பீடி கம்பெனி கொழும்பு 14



Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (15-5-66) இதழ் 97

பராபவ வைகாசி 2 பிறை முஹர்ரம் 23 ஞாயிற்றுக்கிழமை



எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி ஸ்பெஷல்



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.


# விலைவாசிக் குறைப்பு: மந்திரிகள் ஆலோசனை

## இலங்கை - பிரிட்டிஷ் கடன் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, சனி

இலங்கைக்கு பிரிட்டனின் 4 கோடியே 76 லட்சம் ரூபாய் வட்டியில்லாக்கடன் ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது.

இதில் ! முதல்பகுதியான 2 கோடியே 66 லட்சம் ரூபாய் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டது. மிகுதி 210 லட்சம் ரூபாய் இன்று வழங்கப்பட்டது.

உலக வங்கியின் முயற்சியால் பிரிட்டன் 35,70,000 பவுண் இலங்கைக்கு ஏற்கனவே கடன் உறுதியளித்திருந்தது ஞாபகமிருக்கும். உற்பத்தியை பெருக்கும் பொருட்களை பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்ய இக் கடன் பயன்படுத்தப்படும்.

## அநுதரவாக தெருவில் அலைந்த சிறுமி

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடம்பில் ஆடையின்றி அநுதரவான நிலையில் அலைந்துகொண்டிருந்த சுமார் பத்துவயதுச் சிறுமி ஒருத்தி நேற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கச்சேரி-நல்லூர் வீதியை அடுத்துள்ள ஒழுங்கைகளுக்குள் இச்சிறுமி உடம்பில் ஆடையின்றி பரிதாபகரமான நிலையில் அலைந்துகொண்டிருந்ததாகவும், ச் சிறுமியின் உடம்பில் காயங்கள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது. சிறுமியின் பரிதாபநிலையைக் கண்ட அப்பகுதி மக்கள் அச்சிறுமிக்கு ஆடை அணிவித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சிறுமி கச்சேரிப்பகுதியில் பணிப்பெண்ணாக இருந்திருக்கலாம் என்றும் எஜமானியால் துன்புறுத்தப்பட்டநிலையில் அவ்வீட்டை விட்டு வெளியேறியிருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகின்றது. பொலிஸார் விசாரணை நடத்த இருக்கின்றனர்.

## ஜவுளி போதியளவு கிடைப்பதாக அபிப்பிராயம்

கொழும்பு, சனி

நாட்டில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகளைக் குறைப்பது பற்றி இன்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது

விலைவாசிகள் கட்டுப்பாடு பற்றியும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் மத்திய வங்கியும், பொருளாதார நிபுணர்களும் சமர்ப்பித்திருந்த அறிக்கைகளை மந்திரிசபை அலசி ஆராய்ந்தது.

சமீப காலத்தில் வாழ்க்கைத்தரம் கணிசமான அளவு உயர்ந்திருப்பதாக மந்திரிசபைக் கூட்டத்தில் அபிப்பிராயம் நிலவியது. குறிப்பாக ஜவுளி போன்ற மக்கள் பாவனைப்பொருட்களின் விலைகள் கட்டுக்கடங்கியிருப்பதாகவும் அவை போதிய அளவு பாவனைக்குக் கிடைப்பதாகவும் கருத்து நிலவியது. ஜவுளித்தினுசுகள் போதியளவு கிடைப்பதுபோலவே இதர பாவனைப் பொருட்களும் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் தாராளமாகக் கிடைப்பதற்கு வழிவகைகளை ஆராயவேண்டுமென்று பல மந்திரிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது சம்பந்தமாக பொருளாதார நிபுணர்களும், மத்தியவங்கியும் சமர்ப்பித்துள்ள திட்டங்கள் நல்ல முறையில் அமுலாகி வெற்றியளிப்பது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளைப் பொறுத்திருப்பதாக மந்திரிசபை கருதியதாகத் தெரிகின்றது.

விலைவாசிகளைக் குறைத்து மக்கள்வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளை மாத்திரமன்றி சகல அரசாங்க இலாகாக்களையும்கூடக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டப்பட்டிருக்கின்றது.

இன்று நாட்டின் பதுக்கல் நடவடிக்கைகள் ஓரளவு குறைந்திருப்பதும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

மந்திரிசபையின் அடுத்த கூட்டத்தில் விலைவாசிக் குறைப்புப் பற்றியும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் திட்டவட்டமான முடிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

---

## சடலத்தை கொண்டுவர நடவடிக்கை

பத்தேகம, சனி

ஸ்ரீ ராகுலதேரோவின் சடலத்தை கோவாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பத்தேகம எம்.பி. திரு: திலகரத்தின ஒரு பரிசளிப்பு விழாக்கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

---

## கொழும்பில் இந்தியக் கப்பல்

கொழும்பு, சனி

இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான மைசூர் என்ற கப்பல் நல்லெண்ணத் தூதுமேற்கொண்டுகொழும்புத்துறைமுகம் வந்துள்ளது

## அரிசிக்குப் பதில் நெல் சில பகுதிகளில் இவ்வாரம் கூப்பனுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில பகுதிகளில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தியான அரிசியை உண்ணும் வாய்ப்பு இந்த வாரம் கிடைக்கவிருக்கிறது. கட்டைவேலி, சாவகச்சேரி, சுன்னாகம், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் இவ்வாரம் பங்கீட்டரிசிக்குப் பதிலாக நெல் வழங்கப்படும்.

ஒரு இருத்தல் அரிசியின் விலைக்கு ஒரு கொத்து நெல்லு விற்பனை செய்யப்படும். ஒரு கூப்பனுக்கு நான்கு கொத்து நெல்லு வழங்கப்படும்.

இத்திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் இதர பகுதிகளுக்கும் விரைவில விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

நெல்லில் சப்பை, புல்லு, புல்லுக்கொட்டை முதலியவைகளைக் கலந்து, கலப்படம் செய்தால் அதுபற்றி தமது கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவருமாறு யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் விளையும்அரிசியை இப்பகுதிமக்கள் உண்பதற்கு வாய்ப்புக்கிடைப்பதில்லையென்றும் விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து சேமித்துவைக்க களஞ்சிய வசதியில்லையென்றும் சமீபத்தில் இங்கு விஜயம் செய்திருந்த உணவு விவசாயமந்திரி திரு. எம். டி.பண்டாவிற்கு இப்பகுதி எம்.பி.க்கள் தெரிவித்திருந்த குறையின் விளைவாக இவ்வாரம் முதல் கூப்பனுக்கு நெல்விநியோகிக்கத் திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது.

கட்டைவேலி, சாவகச்சேரி, சுன்னாகம், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் இவ்வாரம் அதாவது இம்மாதம் 16-ந் திகதி முதல் கூப்பனுக்கு நெல் வழங்கும் திட்டம் பரீட்சார்த்தமாக அமுல் நடத்தப்படுகிறது. இப்பகுதி பலநோக்குச் சங்க சமாஜங்களுடன் இணைந்த கூப்பன் அரிசி வழங்கும் சங்கக் கடைகள், பலநோக்கச் சங்கங்கள், உத்தரவாதம் பெற்ற தனிப்பட்ட வர்த்தகர்கள் கூப்பனுக்கு நெல் விநியோகிப்பார்கள்.


பாத்திரங்கள் வாங்கும் பொழுது டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

மனமை அதிக தூயவர்களாகச் செய்யவேண்டு மென்பதைத்தவிர ஆசிரம பிரார்த்தனையில் கடவுளை வேறெதுவும் கேட்பதில்லை. உள்ளத்திலிருந்துவரும் உண்மையான பிரார்த்தனையாயின் இறை அருள் சுரப்பது உறுதி.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams EELA[illegible] Phone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 2 உ (15-5-66)


## குடியேற்ற வாசிகள் சங்கடம்

வவுனியாத் தொகுதி முல்லைத்தீவு மாவட்டத்தைச்சேர்ந்த தேவிபுரத்தில் குடியேறிய சுமார் 400 எளிய கமக்காரக் குடும்பங்கள் மிக அவதிப்படுவதாக தகவல்கிடைத்துள்ளது. ஆறு வருடங்களுக்கு முன்பாக அக் குடும்பங்களை, அங்கு குடியேற்றியபோது ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று ஏக்கர் காணி அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டதாம், ஆனால்சென்ற 5 வருடங்களாக கேள்விமுறை எதுவுமில்லை. இன்று 15-ந்திகதிகாணிக் கச்சேரி நடப்பதாயும், குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் நிலம் அளிக்கப்படுமென்றும் கூறி, 80 குடியேற்றவாசிகளுக்கு மட்டும் அழைப்புக் கிடைத்துள்ளது. இவ்வளவுகாலமாக கைப்பணத்தை செலவழித்தும், கடன்பட்டும், காணிதிருத்தியும் கிணறு வெட்டியும் ஒரு பயனுமின்றி கஷ்டநஷ்டமடைந்துள்ளவர்கள், அரசாங்கத்தின் இந்த அறிக்கையைக்கண்டு பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளதில் வியப்பில்லை.

தாங்கள் குடியிருக்கும் பகுதியிலிருந்து சுமார் ஏழு மைல்களுக்கப்பால் தான் இந்த ஒரு ஏக்கர் நிலமும் ஒதுக்கப்படுமாம். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களைப் புரிந்துகொள்வது கஷ்டமல்ல. பல கமக்காரக்குடும்பங்களையும்குடியேற்றியபோது அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை வருடக்கணக்காக நிறைவேற்றாமல் இருப்பது நம்பிக்கை மோசமேயாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியுள்ள இக்காலத்தில், நாட்டின் முதுகெலும்பு போன்ற உழவர்களை இப்படி ஏமாற்றத்துக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் உட்படுத்துவது, பொறுப்புள்ள எந்த அரசாங்கமும் செய்யக்கூடிய காரியமல்ல.

கிளிநொச்சியைச் சேர்ந்த தர்மபுரத்தில் குடியேற்றப்பட்ட நூற்றுக்கணக்கான எளிய விவசாய குடும்பத்தினரும் பொதுவாக இவ்விதமே தங்கள் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று திகைத்துக் கொண்டுள்ளனராம். பல தலைமுறைகளாகவும் பல்லாண்டுகளாகவும் மத்திய இலங்கையில் உழைத்து வந்த அக் குடும்பத்தினர் 1958-ம் வருட கலவரத்திலே மிகவும் துன்புறுத்தப்பட்டு இடம்பெயர்ந்து வடமாகாணத்தில் தஞ்சமடைந்தபோது, தாமபுரத்திலே அவர்களுக்கு ஒரு ஏக்கர் காணி அளிக்கப்பட்டது. அக்காணியை மிக்க கஷ்டப்பட்டு திருத்தி, அதில் பல மரங்களையும் பயிரிட்டு உணவு உற்பத்தி செய்கையில், அவர்களது பெயர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கிவிட்டதால், இனிதங்களை எங்கு விரட்டுவார்களோ என்று அவர்கள் பொதுவாகக் கவலையும் திகிலும் அடைந்துள்ளதாகத்தெரிகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டு மென்று ஒருபுறம்கூறிக் கொண்டு, மறுபக்கம், உழைப்பாளிகளான விவசாயக் குடும்பத்தினரை, மனிதாபிமானமற்ற முறையில் இம்சைசெய்வது எவ்வகையிலும் நல்லதாகாது. இது பெரிய அநியாயமுமாகும். எளிய கமக்காரர்தானேஎன்று அலட்சியமாக இராமல், அம் மக்கள் விஷயத்தில் கூடுதலான அனுதாபம் காட்டி, அவர்கள் நிம்மதியாக வாழ்ந்து, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கித்தரும் பணியைச்செய்ய எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும். இது மிக முக்கியமும் அவசரமுமானதால் அரசாங்க அதிகாரிகளும். எம். பி. மார்களும் உடன் கவனித்து ஆவனசெய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

## கல்வி முறையில் மாற்றம்

இலங்கையிலே இப்போதுள்ள கல்வி முறையைப் பயனுள்ள முறையில் திருத்தி அமைக்கவேண்டுமென்பதில், பொதுமக்களிடையே ஏகோபித்த கருத்துண்டு அமைச்சர் இரியகொல்லை மிக்கச்சிரமப்பட்டு ஆரம்பக்கல்வி, உயர்தரக்கல்வி, பிக்குகள் கல்வி இவ்விஷயமாக வெள்ளை அறிக்கையையும், மசோதாவையும் தயாரித்து வெளியிட்டுள்ளார். இதில் சில நல்ல யோசனைகள் அடங்கி இருக்கலாம். என்றாலும் பொதுமக்களில் பலருக்கு இந்தயோசனைகளைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது. விஷயம் மிக முக்கியமானதாலும், நம் எதிர்கால சக்திகளின் தலையெழுத்தைப்பாதிக்குமாதலாலும், இவ்விஷயத்தில் அவசரப்படாமல், இந்த யோசனைகள் அடங்கிய விபரங்களை நன்கு விளம்பரப்படுத்தி இவை பற்றி பொதுமக்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் இவர்களது கருத்துக்களை அறிந்து, நிதானமாக சட்டம் செய்வதே அறிவுடைமையாகும். அப்படியே அரசாங்கம் செய்யுமென்று நம்புகிறோம்.

### ஆஸ்பத்திரிகளுக்கு
## 5000 மேலதிக படுக்கைகள்

கொழும்பு, சனி

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களுக்கு வசதியளிக்கும் முகமாக மேலும் 5000 படுக்கைகள் கொடுக்கப்படவிருக்கின்றன.

இதற்கென 6 கோடி ரூபாவை இறைசேரி[illegible] மதித்துள்ளது

## [illegible] சண்டை: ஆஸ்பத்திரியில் ஒருவர் அனுமதி

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறையிலுள்ள ஒரு தியேட்டரில் நேற்று முன்தினமிரவு இரண்டாவது காட்சி முடிந்த சில நிமிடத்தில் தியேட்டர் ஊழியர்களுக்கும் பார்வையாளர் ஒரு சிலருக்குமிடையே தியேட்டர் விறுந்தையில் நடைபெற்ற கைகலப்பைத் தொடர்ந்து படம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் படுகாயத்துடன்காங்கேசன்துறைஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட தியேட்டரைச் சேர்ந்த நால்வர் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட இத் தியேட்டரின் இரண்டாவது காட்சி பார்க்க மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் வந்ததாகவும் படம் நடக்கும்பொழுது இம் மூவரில் ஒருவர் வைத்திருந்த டோர்ச்லைட் திடீரென எரிந்ததாகவும் இதைத் தொடர்ந்து தியேட்டர் ஊழியர்கள் இவர்களை வந்து எச்சரித்ததாகவும் பின்னர் படம் முடிந்து இம்மூவரும் வெளியில் வந்தபொழுது தியேட்டர் ஊழியர்களால் தியேட்டர் விறுந்தையில் வைத்துத் தாக்கப்பட்டதாகவும் இத் தாக்குதலின்போது தியேட்டர் வாங்குகளும் பாவிக்கப்பட்டதாகவும், வாங்குத் தாக்குதலினால் மல்லாகம் குளமங்காலைச்சேர்ந்தவேலதி பத்பநாதன் தலைமையில் படுகாயமடைந்ததாகவும் மற்றவர்கள் சிறுகாயம் அடைந்ததாகவும் இது பற்றி மேலும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றப் பிரிவு சார்சண்ட் திரு. எஸ். சின்னையா தியேட்டரைச் சேர்ந்த ஊழியர்களான கெசபதி பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் பழனிப்பிள்ளை, இராசு கமலநாதன் மூத்தார் கந்தசாமி ஆகிய நால்வரையும் சந்தேகத்தின் மீது கைதுசெய்து மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

நீதிபதி சந்தேகநபர்கள் நால்வரையும் இம்மாதம் 16ம்திகதி வரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டு அத்திகதியில் சாட்சிகள் சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதற்காக ஓர் அடையாள அணிவகுப்பை வைக்கும்படியும் உத்தரவிட்டார். சார்ஜண்ட் சின்னையா இதுசம்பந்தமாகத் தொடர்ந்துபுலன்விசாரணை செய்துவருகிறார்.

## உருவாகும் நெசவு நிலையங்கள்

பருத்தித்துறை, சனி

பத்தமேனி கிராமமுன்னேற்றச்சங்க ஆதரவில் அரசினர் நன்கொடைப்பணத்திலிருந்து கட்டப்படவிருக்கும் நெசவு நிலையத்திற்கு காரியாதிகாரி திரு. நா. வேதாரணியசேயோன் அஸ்திபாரக்கல்நாட்டினார். இவ் வைபவத்தில் கிராமமக்களும் கலந்துகொண்டனர். கிராம மக்களின் ஒற்றுமையையும் உற்சாகத்தையும் பாராட்டி காரியாதிகாரி பேசினார். இதற்குரிய காணியை திரு. க. இரத்தின சபாபதி நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஃ ஃ ஃ

கோப்பாய் தொகுதியை சேர்ந்த வளலாயில் அரசினர் நன்கொடைப் பணத்திலிருந்து கட்டவிருக்கும் நெசவு நிலையக்கட்டிடத்திற்கு அச்சுவேலி கிராம சபைத்தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி அஸ்திபாரக் கல்லை நாட்டினார். அச்சுவேலி கிராமசபை உறுப்பினர் திரு. தா. சிவலிங்கம் கிராமமக்கள் கொண்டுள்ள முயற்சியையும், மக்களின் ஒற்றுமையையும் பாராட்டினார்.

வளலாய் சன சமூக நிலையம் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

கோப்பாய் தொகுதியிலுள்ள நவக்கிரி என்னும் இடத்தில் நவக்கிரி கிராம முன்னேற்றச் சங்கம் கொடுத்துள்ள காணியில் திரு. க. சுந்தரமூர்த்தி நெசவு நிலையம் ஒன்றுக்கான அஸ்திபாரக்கல்லை நாட்டினார்.

## "நூல்நிலையங்கள் அறிவை வளர்க்கவேண்டும்"

கோண்டாவில், சனி

"மக்களின் அறிவை வற்றுது பெருக்கி அறியாமையை அகற்றி அவர்களை நல்வழிப்படுத்தி உயர்வடையப்பண்ணும் சாதனங்களுள், சனசமூக நிலையங்களும் ஒன்று. சிறுவர்களைப் பெரியார்களின் இலட்சியப் பாதைகளில் புகுத்த நாட்டில் நல்ல சனசமூக நிலையங்கள் வேண்டும். மக்கள் தம் ஓய்வு நேரத்தைத் தீயவழிகளில் செலவிடுவதால் தான் இன்று நம்நாட்டிலே எத்தனையோ பஞ்சமாபாதகச் செயல்கள் இடம் பெறுகின்றன. இக்குறைபாட்டை நீக்கி குற்றப் பெருக்கைத் தடுத்து மக்களை நல்வழிப்படுத்துவதில் நூல்நிலையங்களும், சனசமூக நிலையங்களும், கிராமமுன்னேற்றச் சங்கங்களும் முன்னின்று உழைக்கவேண்டும்."

அளவெட்டி பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வை. இராசதுங்கம் தலைமையில் நடைபெற்ற நாடக விழாவில் கலந்துகொண்ட திரு. சி. ஆறுமுகம் மேற்கண்டவாறு பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், நூல்நிலையங்களில் "பக்தியை வளர்த்துப் பண்பைப் பெருக்கி அன்பைஊட்டும் நூல்கள் நிறையவேண்டும். சிறுவர்களின் மனதைக் கொள்ளைகொள்ளும் பக்தி இலக்கிய நூல்கள், பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கும் நூல்கள், உளநூல், ஆராய்ச்சி நூல்கள் ஆகியன தாராள[illegible]" கூறினார்.

## நாடும் நடப்பும்

தமது கணவனின் தலையிலிருந்துவரும் சப்தங்களால் தமக்குப் பைத்தியமே பிடித்துவிடப்போகிறது என்று நியுயோர்க்கைச் சேர்ந்த ஒரு பெண்மணி கூறுகிறார்.

கணவனின் தலையிலிருந்து சில வேளைகளில் அபாயச் சங்கு போன்ற அலறல் சப்தம் வருகிறது. இன்னும் சில வேளைகளில் நீர்த்தாரை ஒழுகுவது போன்று கேட்கிறது. அழும் பொம்மையின் குரல்போன்ற ஒன்று கேட்பதாகவும் மற்றொரு ஓசை குளத்தில் தவளை கரைவதுபோல் இருக்கிறது என்றும் மார்ஜியிக் பித்ரோவா என்ற அந்தப் பெண் கூறுகிறார்.

டோரியன் என்ற பெயருள்ள 38 வயதான அப் பெண்ணின் கணவன் இரண்டாண்டுகளுக்குமுன் மியாமியில் ஒரு விபத்தில் அகப்பட்ட பொழுது அவரின் மண்டை உடைந்ததாம். மூன்று தடவைகள் சத்திர சிகிச்சை செய்தும், அவர் இப்பொழுது பத்து அடி தூரத்துக்கப்பாலிருக்கையிலேயே இந்த ஓசைகள் கேட்கின்றனவாம்.

இது பெரிய ஆச்சரியமான விஷயம்தான்! இதிலென்ன ஐயா ஆச்சரியம் என்று கேட்கிறார், மனைவியின் நச்சரிப்பைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன ஒரு கிரகஸ்தர்!

ஃ ஃ ஃ

இந்தியாவில் அடுத்த வருடமுற்பகுதியில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்தியாவில் பல பிரச்னைகள் இருக்கின்றன ஆனால் இப்பொழுது எந்தப்பிரச்னையும் தேர்தல் கண்ணோட்டத்துடன்தான் அணுகப்படுகிறது. எந்த ராஜ்யத்தையும் விட தமிழ் நாட்டில் தான் தேர்தல் ஜுரம் இப்பொழுதே வேகமாகப் பரவத் தொடங்கியிருக்கிறது. பத்திரிகைகளில் வரும் அறிக்கைகளும் பதில் அறிக்கைகளும் சவால்கள், எதிர்ச் சவால்கள் எச்சரிக்கைகள் கொஞ்சமல்ல! கிண்டல்கள் கடிதங்கள் அளப்பில. தமிழில் எவரை, எப்படியெல்லாம் கடுமையாகத்தாக்கலாம் என்பதற்கு இவை சாம்பிள்! கேலிச்சித்திரங்களுக்கும் குறைவில்லை! இப்பொழுதே இந்த நிலை என்றால் தேர்தல் காலம் நெருங்கும்போது எப்படி இருக்குமோ! இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு கட்சியிலிருந்து அந்தக் கட்சியின் கொள்கைப்பிரசாரம் செய்தவர்கள் அதிலிருந்து வெளியேறிஅதற்குஎதிராக, அவர்கள் பாஷையிலேயே அவர்களைத் திட்டுவதுதான்!

ஃ ஃ ஃ

திரைகடலோடியும் திரவியந்தேடச்சென்று, இன்று அகதிகளாக தாய்நாடுதிரும்பும் தமிழர் பலர் அந்தமானில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். அந்தமான்என்றதும் ஐயோ! என்ற காலம் ஒன்று உண்டு. இன்று அந்நிலைமாறிவிட்டது. அந்தமான் நிக்கோபார் தீவுகள் விரைவாக அபிவிருத்தியடைந்து வருகின்றன. அந்தமான் நிக்கோபர் தீவுத் தொகுதியில் பெரியதும் சிறியதுமாக 223 தீவுகள் இருக்கின்றன. அவற்றின் தலைநகரம் ப்ளேர்துறைமுகம். இது கல்கத்தாவிலிருந்து 780 மைல் தூரத்திலும், சென்னையிலிருந்து 740மைல் தூரத்திலும் அமைந்திருக்கிறது. இந்தத் தீவுகளி இரண்டு பருவகாலங்களிலும் மழைபெய்கிறது. 1964-ம் ஆண்டில் இத் தீவுகளின் மொத்த ஜனத்தொகை சுமார் 70 ஆயிரம் மக்கள். 1901-ம் ஆண்டில்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

45 மொழிகள் இங்கு புழக்கத்தில் இருந்திருக்கின்றன. 1961-ம் ஆண்டில் எடுத்த ஜனத்தொகைக் கணிப்பின்படி இங்குள்ள முக்கிய மொழிகள் இந்தி, தமிழ், மலையாளம், வங்காளி, தெலுங்கு ஆகியவையாகும். இந்தியாவிலிருந்து அந்தமான் தீவுகளுக்கு ஏழுமணி நேரத்தில் விமானத்திலும் 56 மணி நேரத்தில் கப்பலிலும் போய்ச் சேரலாம். தலைநகரமான ப்ளேர் நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட், தி. மு. க. முதலிய அரசியல் கட்சிகள் கலந்துகொண்டன

என்ன! அந்தமானுக்கே போய்விடுவது நல்லது என்ற நினைப்பு உங்களுக்கு ஏற்படுகிறதா?

-ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ஆயுத பரிகரண மகாநாட்டில்

# சீனா கலந்து கொள்ளாது

# பீகிங் வெளியிட்ட மறுப்பு

## சீன சோதனைக் குண்டு ஜலவாயு குண்டல்லவாம்

பீகிங், மே 14

1967-ம் ஆண்டுக்கு முன் உலக படைக்குறைப்பு மகாநாட்டை கூட்டும் முயற்சியில் ஐ. நா.விலுள்ள மண்டல சார்பற்ற நாடுகள் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் அவ்வித மகாநாடு ஒன்றில் கலந்துகொள்வதை சீனா நிராகரித்திருக்கிறது.

இப்போதைய நிலையில் இத்தகைய மகாநாட்டுக்கு அவசியம் இல்லை என சீனா அறிவித்திருக்கிறது. சீனாவின் நிராகரிப்புக்கு வியட்நாம் சண்டை ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

உலக படைக்குறைப்புமகாநாடு ஒன்றை நடத்துவது பற்றி நேற்று ஐ. நா.விலுள்ள மண்டல சார்பற்ற நாடுகள்கூடி ஆலோசனை நடத்தின. ஆலோசனைக் கமிட்டி ஒன்றை அது அமைக்கவிருக்கிறது.

மகாநாட்டுக்கான யோசனை கெய்ரோவில் யூகோ, ஐக்கிய அராபியத் தலைவர்களால் வெளியிடப்பட்டது. அதை ஐ. நா. ஆதரித்துள்ளது.

இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை சீனா வெடித்த குண்டு, ஒரு ஜலவாயுக் குண்டு அல்ல என்று அதன் கதிரியக்கம் நிரூபிப்பதாக அமெரிக்க ராஜாங்கஇலாகா அறிவித்தது. வளப்படுத்தப்பட்ட யூரேனியம் தான் இதன் வெடிக்கும் பொருள் என்றும், கடந்த கால சீன சோதனைக் குண்டுகளைப் போன்ற, ஆனால் அதிக சக்திவாய்ந்தது இது என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது. இப்போது வெடித்த குண்டில் புருடோனியம் இல்லை. குண்டினால்ஏற்பட்ட கதிரியக்க படலம் அமெரிக்காவுக்கு மிக உயரே இப்போது நகர்ந்துகொண்டிருக்கிறது.

சீனா ஐ. நா.வில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும். ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டில் அது சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் பிரிட்டிஷ் ஆயுதப் பரிகரண மந்திரி செல்போன் பிரபு கூறியிருக்கிறார் இன்றேல்அணுத் தடைஒப்பந்தத்தை வெற்றிகரமாக அமுல் செய்வது கஷ்டம் என்றும் அவர் கூறினார்.

## உயர் நீதிமன்றம் விசாரிக்கும்

புதுடில்லி, மே 14

தேர்தல் ஆட்சேபனை மனுக்களை இனி 'ஹைகோர்ட்'டே நேரடியாக விசாரிக்கும் முறையில் இந்தியா சட்டமியற்றும் என அறிவிக்கப்பட்டது,

## இருமுனை அபாயம்

ஜாகர்த்தா, மே 14

மலேஸியாவில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இருக்கும்வரை மலேஸிய எதிர்ப்புக் கொள்கை நீடிக்குமென இந்தோனேஷிய மந்திரி ஜெனரல் சுபந்தோ அறிவித்திருக்கிறார். இந்தோனேஷியா, எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட்டு விட்டதாகக் கூறப்படுவது சரியல்ல என்றும் அவர் மறுத்தார்.

சீனாவும், மலேஸியாவும் இந்தோனேஷியாவுக்கு இருமுனை அபாயங்கள் என அவர் கூறினார்.

ரொடீஷியாவில்

## 21 ஆபிரிக்கருக்கு சிறைத்தண்டனை

ஸாலிஸ்பரி, மே 14

ரொடீஷியாவில் சட்ட விரோத ஸ்மித் ஆட்சிக்கு விரோதமாக சதிநாசவேலை, உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக 21 ஆபிரிக்கர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 20 பேருக்கு தலா 10 ஆண்டு சிறையும், ஒருவருக்கு 5 ஆண்டு சிறையும் விதிக்கப்பட்டது.

மற்றோரிடத்தில் 7 ஆபிரிக்கர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ரொடீஷியாவின் எண்ணெய் சப்ளை குழாய்களை துண்டிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

வெளிநாடுகளில் கொரில்லா பயிற்சிபெற்ற கம்யூனிஸ்டுகள் என, இவர்கள் மீது ஸ்மித் ஆட்சியினர்குற்றஞ்சாட்டியிருந்தனர்.

## பிரிட்டிஷ் மாலுமிகள் வேலைநிறுத்தம்

லண்டன், மே14

வருகிற ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பிரிட்டிஷ் வாணிபக் கப்பல் மாலுமிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்படுகிறது. இதனால் 2500 வாணிபக் கப்பல்கள் பாதிக்கப்படும் என மேலும் அறிவிக்கப்படுகிறது.

## இன்று இறுதிப் போட்டி

மணிலா, மே 14

[illegible] ஆசிய [illegible]த்தின் இறுதிப் போட்டி நடைபெறும்.

## உணவு பஞ்சத்தினால் ஒரிஸ்ஸா மக்கள் துன்பம்

### குடிநீருக்கும் கஷ்டமாம்

புவனேஸ்வரம். மே 14

இந்திய ராஜ்யமான ஒரிஸ்ஸாவில் ஏற்பட்டுள்ள மோசமான வரட்சியையும். உணவுப்பஞ்சத்தையும் போக்க மத்திய அரசாங்கம் உடனடியாக 2 கோடி ரூபாய் வழங்கவிருப்பதாக பிரதமர் இந்திராகாந்தி அறிவித்தார்.

மொத்தம் 18 ஜில்லாக்களில் 12 ஜில்லாக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 14 கோடி ரூபாய் உதவி அளிக்கவேண்டும் என ஒரிஸா அரசாங்கம் பிரதமரைக்கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்று பல கட்சித்தலைவர்களைச் சந்தித்து நிலைமை பற்றி ஆராய்ந்ததாக இப்போது அவர்பஞ்சாப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

ஸ்ரீமதிகாந்தி பேசியஇடத்தில் கூட்டத்தின் ஒருபகுதியினர் தொல்லை விளைவிக்க முயன்றனர். ஆனால் பிரதமர் தொடர்ந்து பேசினார். கலகத்தினால் பிரச்னை தீராது என அவர் கூறினார்.

ஒரிஸ்ஸாவில் துன்பங்கள் விரிவாகப் பரவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. தண்ணீருக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், மழை பெய்தாலும் நோய் பரவும் அறிகுறி ஏற்பட்டிருப்பதாயும், இப்போது மாபெரும் பிரச்னை உருவெடுத்துக் கொண்டுருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## பிரான்சில் 20 லட்சம் பேர் வேலை நிறுத்தம் செய்வர்

பாரிஸ், மே 14

சிறந்த வேலை வசதியும், சம்பள உயர்வும் கோரி அடுத்த வாரம் 20 லட்சம் அரசாங்க ஊழியர்களும் தனிப்பட்ட தொழிலைச் ஊழியர்களும் 24 மணி நேர வேலைநிறுத்தம் செய்யவிருக்கும் சவாலை, பிரான்ஸ் எதிர்நோக்கியிருக்கிறது.

பொதுவாகனப்போக்குவரத்து இல்லாத நிலையில் கார்கள் மூலமாகவும், கால்நடையாகவும் பிரஞ்சுக்காரர்கள் தங்கள் அலுவல்களை அப்போது கவனிக்க வேண்டியிருக்கும். லிப்டுகளின்றி கட்டிடங்களின் உச்சிக்குச் செல்லவும், வீதிகளில் குப்பை கூளங்களைக் காணவும் வேண்டியிருக்கும்.

மின்சார ஊழியரின் வேலை நிறுத்தம்தான் அதிகமாகப் பாதிக்கவிருக்கிறது. தொழில் ஆலைகள், ரயில்வேக்கள் ஆகியனவும் பாதிக்கும்.

## கண்டனங்கள்

ஜாகர்த்தா, மே 14

பல அரசியல் கட்சிகளைக் கொண்ட இந்தோனேஷிய தேசிய முன்னணி சீனஅணு குண்டு சோதனை, தமது நாடு உட்பட எல்லாதென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அபாயமானது எனக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையில் சீனா மீது அமெரிக்க விமானங்கள் போரில் ஈடுபட்டதை ரஷ்ய செய்திஸ்தாபனம் 'டாஸ்' கண்டித்திருக்கிறது,

பிரிட்டிஷ்

## நகரசபை தேர்தல்களில் கன்சர்வேட்டிவ் வெற்றி

### பல தொழிற்கட்சி நகரங்களைப் பிடித்தனர்

லண்டன், மே 14

பிரிட்டனின் 323 நகரசபைத் தேர்தல்களில் கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் வெற்றியீட்டியுள்ளது. திரு. வில்சனின் தொழிற்கட்சி 200க்கு மேற்பட்ட தனது ஸ்தானங்களை கன்சர்வேட்டிவ்களிடம் பறிகொடுத்துள்ளது.

அறிவிக்கப்பட்ட 300 ஸ்தானங்களின் முடிவுகளின்படி, பர்மிங்ஹாம், மத்திய இங்கிலாந்து உட்பட 11 தொழிற்கட்சி நகரசபைகள் அவர்கள் ஏற்கனவே பிடித்துவிட்டார்கள். இந்த நகரசபைகள் கடந்த 14 ஆண்டுகளாக தொழிற்கட்சி வசம் இருந்தன.

லீசெஸ்டர், பிளைமவுத், கார்டிப் ஆகிய தொழிற்கட்சி நகரசபைகளும் கன்சர்வேட்டிவ்களிடம் வந்துவிட்டன.

ஆனால் தேசிய அரசியலின் அடிப்படையில் பார்க்குமிடத்து, கன்சர்வேட்டிவ் வெற்றிக்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. ஏனெனில் 6 வாரங்களுக்கு முன்புதான் திரு. வில்சனின் தொழிற்கட்சி பெரும் மெஜாரிட்டியுடன் பார்லிமெண்டில் வெற்றிபெற்றது. பி. டி. ஸி.

## வால்ட் டிஸ்னிக்கு சமாதான நோபல் பரிசு

### அர்ஜன்டீனாவில் இயக்கம்

புவனஸ்அயர்ஸ், மே 14

பிரபல பட உற்பத்தியாளர் வால்ட் டிஸ்னிக்கு சமாதானநோபல்பரிசுவழங்கப்படவேண்டும் என்ற இயக்கம் அர்ஜண்டீனா முழுவதும் பரவிவருகிறது.

புவனஸ் அயர்ஸ் சினிமா தியேட்டர் சொந்தக்காரர் ஒருவரே இதற்குக்காரணம். செனட்டர்கள், கலைஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பிரபலஸ்தர்களை அவர் சென்ற திங்கட்கிழமை அழைத்து ஒரு கூட்டம் நடத்தி தனது திட்டத்தை வெளியிட்டார். அனைவரும் ஏகமனதாக இந்த யோசனையை ஆதரித்தனர்.

இப்போது நாட்டின் மிகப்பிரபலமானபத்திரிகையும் இப்போது டிஸ்னியை ஆதரித்து இயக்கம் நடத்துகிறது. புகழ்பெற்ற கேலிச் சித்திர சினிமாக் காட்சிகள் மூலம் ஆத்மீக உயர்வை அவர் பரப்பியுள்ளார் என்றும், உலக சரித்திரத்தில் மோசமான ஒரு சமயத்தில் தார்மீக உணர்வுகளை தோற்றுவித்திருக்கிறார் என்றும் இப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

அர்ஜண்டீனா மிருக பாதுகாப்பு சங்கங்களின் சம்மேளனமும் இதை ஆதரித்து இயக்கம் நடத்துகிறது. (பி. டி. ஸி.)

## அமெரிக்க நிலத்தடி சோதனை

நெவாடா, மே 14

நெவாடாவில் அமெரிக்கா புதிய நிலத்தடி அணு சோதனை ஒன்றை நடத்தியிருக்கிறது. கடந்த 2 வாரங்களில் இது ஐந்தாவது சோதனையாகும்.

## சீனா ஆட்சேபம்

பீகிங், மே 14

தென் வியட்னாமுக்கு கடல், விமானப்படைகளை அனுப்புவதென்ற தாய்லந்தின் முடிவை சீனா ஆட்சே[பி]த்திருக்கிறது.

## பிரிட்டன் எதிர்ப்பு

லண்டன், மே 14

ரொடீஷியா சம்பந்தமாக 31 ஆபிரிக்க நாடுகள் பாதுகாப்புசபையில் கொண்டுவரும் தீர்மானத்தை தாம் ஆதரிக்கமுடியாது என பிரிட்டன், சாம்ராஜ்யநாடுகளுக்கு [illegible]திருக்கிறது.

## இலங்கை வரும் பிரிட்டிஷ் நிபுணர்

லண்டன், மே 13

தர அளவுப்பாடு, உற்பத்திப் பொருட்களுக்கான தராதரமளித்தல் ஆகிய துறைகளுள் பிரிட்டனில் சிறந்த நிபுணர்களுள் ஒருவர் மே 27-ம் திகதி இலங்கை வருகிறார். இலங்கையில் ஒரு தர அளவுப்பாடு, பரிசோதனைப் பி[ரி]வொன்றைஅமைப்பதுபற்[றி] இலங்கை அரசாங்கத்திற்[கு] [illegible] ஆலோசனை[கள்] இவர் கூறுவார்.

கொழும்புத் திட்டத்தின் கீழ், இந்த நிபுணர் திரு. அல்பேட் ரப்நெல்லின் விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. குறைந்தது இரு வருடங்களாவது இலங்கையில் திரு. ரப்நெல் தங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் இங்கிலாந்துக்கு விஜயம்செய்த இலங்கை மீன்பிடி கைத்தொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன, இந்தத் தர அளவுப்பாடு முறைகளிலும், உற்பத்திப் பொருள்களுக்கு சான்றுப்பத்திரம் அளிக்கும் திட்டத்திலும் கூடிய ஆர்வம் காட்டியதன் பலனாகவே இவ் விஜயம் ஒழுங்காகியுள்ளது.

## விஷமப் பிரசாரம்

புதுடில்லி, மே14

சீனாவும், பாகிஸ்தானும் இந்தியாவுக்குஎதிராக தீவிர விஷமப்பிரசாரங்கள்செய்து வருவதராய் தகவல் மந்திரி ராஜ்பகதூர் அறிவித்தார்.

## பிரிட்டிஷ் மகாராணி

லண்டன், மே 14

5 நாள் பெல்ஜிய விஜயத்தின்பின் பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தும், அவரது கணவரும் லண்டன் திரும்பினர்.

## பிரஸ்னேவ் திரும்பினார்

மாஸ்கோ, மே 14

ருமேனியாவுக்குச் திடீர் விஜயம் மேற்கொண்ட ரஷ்ய ஜனாதிபதி பிரஸ்னேவ் நேற்றிரவு விசேஷ விமான மூலம் மாஸ்கோ திரும்பினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேநீர்க்கடை திருட்டு வழக்கு
### எதிரிகளுக்கு தண்டனை

வல்வெட்டித்துறை, சனி
மட்டக்களப்பு திருக்கோயிலைச் சேர்ந்த சூரியன் ஆண்டி என்பவரும் அராலி கிழக்கைச் சேர்ந்த க. கனகசுந்தரம் என்பவரும் சென்ற சித்திரை மாதம் 23ந் தேதி இரவு தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் உள்ள ஒரு தேநீர்க்கடையுள் புகுந்து களவாடியதாக இருவர் மீதும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரிகள் இருவரும் தாங்கள் குற்றவாளிகளெனக் கூறவே மாஜிஸ்டிரேட் ஆண்டி என்பவருக்கு 2 வார கடூழியச் சிறைத்தண்டனையும், கனகசுந்தரத்திற்கு 6 வாரக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் எவரும் ஆஜராகவில்லை. பொலிஸ் சார்ஜண்ட் திரு எம். அமிர்தநாதன் வழக்கை நடத்தினர்.

---

## தொண்டமானாற்றில் மீன்பிடித்துறைமுகம்
### வேலைகள் ஆரம்பம்

வல்வெட்டித்துறை, சனி
மீன்பிடி கூட்டுஸ்தாபனத்தினால் தொண்டமானாறு உப்புமால் கடற்கரையில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் சென்ற வாரம் தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது

பருத்தித்துறை எம் பி திரு கே துரைரத்தினத்தின் தீவிர முயற்சியினால் இத்துறைமுகத்தின் வேலைகள் ஆரம்பமாகி யிருக்கிறதென தெரியவருகிறது

...பகுதியில் இத்துறை... தலைமை நிலையமாக ஏற்படுத்துவதற்கு கூட்டுஸ்தாபனம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அறியப்படுகிறது

---

### மொழிவழிதொழிற்சங்கத்தில்
## 1500 அரசாங்க ஊழியர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்கத்திலிருந்துவெளியேறிய 500க்கு மேற்பட்ட யாழ் கிளை அங்கத்தவர்களில் பலர் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மொழிவழி தொழிற்சங்கத்தில் சேருவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள் என தெரியவருகிறது. அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்கத்திலிருந்து வெளியேறிய அங்கத்தவர்களை யாழ். கிளை மொழிவழி தொழிற் சங்கத்தில் சேர்ப்பதுபற்றி இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும் எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

---

## மல்யுத்தம்

வல்வெட்டித்துறை, சனி
தொண்டமானாறுஇளைஞர் விளையாட்டுக் கழக நிதிக்காக கொழும்பு வை. எம். சி. ஏ வீரர்களுக்கும் வடமராட்சிவீரர்களுக்கு மிடையில் தொண்டமானாறு இந்து ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நேற்று மல்யுத்தப் போட்டியொன்று நடைபெற்றது இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் டி டி என் பெரரோ கே டி ஜினதாசா, எம் பி எம் பீரிஸ் ஆகியோர்கடமையாற்றினர்

விளையாட்டுக்கழக காரியதரிசி திரு அதிரூபன் யாவர்க்கும் நன்றி கூறினர்

---

## திருநாவுக்கரசர் குருபூ...

வல்வெட்டித்துறை, சனி
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் திருநாவுக்கரசர் குருபூசை விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்னதானமும்வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

அல்லாய் முத்துமாரி அம்மன் கோவிலில் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நேற்று சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் முன்றலில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை சங்கத் தலைவர் திரு. வை. இராசையா தலைமையில் நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாமன்றத்தலைவர் திரு. அப்புலிங்கம், திரு. வைரமுத்து உட்படப்பலர் உரை நிகழ்த்தினர். 'அப்பரும் அக்காவும்' என்னும்பொருள்பற்றி திரு. பொன்னம்பலம் கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார் ஃ ஃ ஃ

வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினத்தை மிகவும் விரிவான முறையில் கொண்டாடினர். அன்று வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலிலுள்ள பற்றைமுட்களுகள் முதலியவற்றை அப்புறப்படுத்தினர் முப்பதுக்கு மேற்பட்ட வாலிபர்கள் இதில் கலந்து கொண்டனர்.

---

## 4000 டன் எண்ணெய் நாசம்

ஏடன் மே14
ஏடனில் பயங்கரவாதிகள் இரு எண்ணெய்க் குதங்களுக்குத் தீ வைத்ததால், 4000 டன் எண்ணெய் நாசமாகியதாக அறிவிக்கப்பட்டது.

---

## குண்டு வெடித்து ஐவர் பலி

அம்பாலா, மே 14
அம்பாலாவில் குண்டு ஒன்றுடன் தெரியாத்தனமாக விளையாடிய 4 குழந்தைகள், அது வெடித்ததால் உயிரிழந்தனர். மற்றும் ஒருவரும் மாண்டார்.

---

## கொள்ளையர்

கல்கத்தா, மே14
மேற்கு வங்கத்திலுள்ள நாதியா ஜில்லாவில் துப்பாக்கி, கத்தி, தடிகளுடன் வந்து பாகிஸ்தானியகொள்ளைக் கோஷ்டி 24 கால்நடைகளைக் கடத்திச்சென்று விட்டதாகக் கூறப்பட்டது.

---


## 1966-ம் வருடத்து மிஸ் இலங்கை போட்டியில்
### வெற்றி பெறுபவர்களைத் தெரிவுசெய்து
## பி. ஸி. ஸி. சுவேந்திரா
### அளிக்கும் 1000 ரூபாய்க்கு மேற்பட்ட பரிசுகளை வெற்றியீட்டுங்கள்!




1-வது பரிசு ரூ. 500
2-வது பரிசு ரூ. 250
3-வது பரிசு ரூ. 100
5 ரூ. 50 ஆறுதல் பரிசுகள்

### நீங்கள் செய்ய வேண்டியது

(1) உங்கள் பெயரையும் விலாசத்தையும் கீழிருக்கும் கூப்பனில் நிரப்பி 1966-ம் வருடத்து மிஸ் இலங்கை போட்டியில் வெற்றி பெறக்கூடிய முதல் மூன்று பேரின் இலக்கங்களை மட்டும் குறிப்பிடுக.

(2) எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றோடும் ஒவ்வொரு பி. ஸி. ஸி. சுவேந்திரா சோப் மேல் கவர் இருக்க வேண்டும்.

(3) என்வெலப்பின் மேல் இடது மூலையில் '1966 மிஸ் இலங்கை போட்டி' என்று குறித்து பின் வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

ஏ. ஜே. என். செனவிரத்ன அன்ட் சன்ஸ
தேஷனல் மியூச்சுவல் கட்டிடம்,
கொழும்பு—1

இங்கே வெட்டு

1966 மிஸ் இலங்கை போட்டியில் எனது தெரிவுகள்

வெற்றி பெறுவர் இல. ..........
இரண்டாவது இல. ..........
மூன்றுவது இல. ..........
பெயர் ..........
விலாசம் ..........

பி. ஸி. ஸி. லிமிடெட், அதன் துணைக்காரியாலயங்கள், ஏ. ஜே. என். செனவிரத்ன அன்ட் சன்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் சிப்பந்திகளும் (அவர்களுடைய குடும்பத்தினரும்) இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

### முடிவு திகதி

1966 மே மாதம் 17-ந் திகதி காலை 11 மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 91, கஸ்தூரியார் வீதி சந்திரா அடைவு கடையில் 1-3-62 தொடக்கம் 31-12-64 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 15-6-66 புதன்கிழமை முற்பகல் ஐத்து மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
411

## கேள்வி விளம்பரம்

### உடுப்பிட்டி கிராமசபை

கீழ்க்காணும் வேலைகட்குச் சில் வைத்த கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த கொந்தராத்துக்காரர்களிடமிருந்து 29-5-66 காலை பத்து மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 25/- கட்டுப்பணமும், ரூபா 5/- பத்திரப்பணமும் செலுத்துவதன் பேரில் 28-5-66 பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

விபரம்:- சபைக்காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்: 1. திராவத்தை வீதி.
2. கெருடாவில் வடக்கு வீதி.

இ. இ. தர்மரத்தினம்,
அக்கிராசனர்.

கி. ச. காரியாலயம்,
உடுப்பிட்டி, 13-5-66
418

## அறிவித்தல்

வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கிலுள்ள உங்கள், உங்கள் பகுதியில் உள்ளபயிர்ச்செய்கைக் குழுவினர்கள் நெற்காணி இடாப்பு தயாரித்திருக்கின்றார்கள். எவராவது தன்னுடையபெயர் இடாப்பில் பதியப்படாமலிருந்தால் அல்லது தன்னுடைய பெயருக்கு எதிரே இடாப்பில் பிழையான விபரங்கள் பதியப்பட்டிருந்தால், அவர் தன்னுடைய பெயரை இடாப்பில் பதியும்படி அல்லது தன்னுடைய பெயருக்கு எதிரே இடாப்பில் சரியான விபரங்களைப் பதியும்படி உங்கள் ப. செ, குழுவினருக்கு உடனடியாக மனுச்செய்யவும்.

சு. அம்பலவாணர்
கௌரவகாரியதரிசி
ப. செ. குழு.,
வலி. மேற்கு,
வலி. வடக்கு சமாசம்.
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. 419

## தமிழருக்கு சிறப்பு தரும் நிகழ்ச்சி!

சுழிபுரம், சனி

''தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு மலேஸியாவில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சிமகாநாடு ஊன்று கோலாக அமைந்திருந்தது. உலக அறிஞர்கள் ஒன்று கூடித் தமிழ்மொழியின் தொன்மைபற்றி ஆராய்ச்சி நடத்தியது பலவகையிலும் தமிழுக்குச் சிறப்புத் தருகிறது'' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் இங்கு பேசுகையில் கூறினார்.

வழக்கம்பரை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார்.

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கோலாலம்பூரிலும் அங்குள்ள மற்ற இடங்களிலும் இங்கிருந்து சென்றவர்களுக்கெல்லாம் நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டதென்றும் மகாநாட்டில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்ததாகவும் தெரிவித்தார்.

## முத்தமிழ் விழா

மண்டைதீவு, சனி

மண்டைதீவு உதய சூரியன் சனசமூகநிலையத்தினர் தமது 20-வது வருட நிறைவையொட்டி முத்தமிழ்விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் இவ்விழா மூன்று நாள்வரை நடைபெறவிருக்கிறது.

முதல் நாள் நிகழ்ச்சிகள் கந்தமுருகேசனார் அரங்கிலும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் பாரதிதாசன் அரங்கிலும், மூன்றாம்நாள் நிகழ்ச்சிகள் வள்ளுவன் அரங்கிலும் நடைபெறும்.

இந்த விழாவில் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் உட்படப் பல அறிஞர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

## அல்[illegible] [illegible]வெற்றி

வல்வெட்டித்துறை, சனி

காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக்கழகத்திற்கும் அல்வாய் இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் இந்து வாலிபர் சங்க விளையாட்டுக்கழகம் இரு ஆட்டங்களிலும் முறையே 15:1, 15:14 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. ஏ. கும்ரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சுங்க-பொலிஸ் கோஷ்டி ஏமாற்றம்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் அரிசி இறக்குமதி செய்துகொண்டிருக்கும் ''எஸ். எஸ். பெனார்மி'' என்னும் கப்பலில் கள்ளக்கடத்தல் சாமான்கள் இருப்பதாகக் காங்கேசன் துறைப் பொலிசாருக்குக் கிடைத்த ஓர் தகவலைத் தொடர்ந்து காங்கேசன் துறைப் பொலிசார் கப்பலைச் சோதனையிட்டனர். இச்சோதனை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்ததாயினும் சுங்க - பொலிஸ் கோஷ்டியினரால் ஒன்றும் கைப்பற்றப்படவில்லை. இவர்கள் ஏமாற்றத்துடன் கரை திரும்பினார்கள்.

## விளையாட்டுச் சங்க உத்தியோகத்தர்கள்

வல்வெட்டித்துறை, சனி

யாழ்ப்பாணம் விளையாட்டுச்சங்கக் கூட்டம் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கே. இராசையா, உபதலைவர்கள் திருவாளர்கள் சி. பாலசிங்கம், ஆர். சச்சிதானந்தம், ஈ. கனகலிங்கம், வி. எஸ். கிருபராசா, ஏ. சுப்பிரமணியம், ரி. சேனாதிராசா. காரியதரிசி: திரு. வி. ரி. கணேசலிங்கம், உபகாரியதரிசி: திரு. எஸ். ஜி தேவா, பொருளாளர்: திரு பி. மகேந்திரா. மற்றும் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

கோண்டாவில், சனி

ஆலங்குளாய், சண்டிலிப்பாய் சனசமூக நிலையத்தின் மதாந்தக்கூட்டம் திரு நா. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. நா. செல்வராசா, உபதலைவர்: திரு. இ. இராமநாதன், காரியதரிசி: திரு. சு. சிவராசா, உபகாரியதரிசி: திரு. இராசலிங்கம், தனாதிகாரி: திரு. த. யோகராசா, உபதனாதிகாரி; திரு. பொ. பாலசுப்பிரமணியம்.

## திருடர்கள் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதியில் திருடர்கள் நடமாட்டம் இப்போது அதிகரித்துவருவதாக அறியப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் கொட்டடி, நல்லூர் ஆகிய இடங்களில் இரவுநேரத்தின் போது திருடர்கள் வீடுகளில் புகுந்து துணிகளையும் வேறு சில விலை உயர்ந்த பொருள் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

### தேவை

**மணமகள்**

சொந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் யாழ்ப்பாணத்துக்கத்தோலிக்க வாலிபருக்கு மணமகள் தேவை. வயது 25. சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இலக்கம் 345 மே/ பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 345

**சங்கீத ஆசிரியை**

சங்கீத ஆசிரியை தேவை. சங்கீதத்தில் அடைந்துள்ள தகைமைகள். அனுபவம் முதலிய விபரங்களோடு தராதரப் பத்திரங்களின் பிரதிகளுடனும்25-5-66க்கு முன்பு கௌரவ பொதுச் செயலாளர், விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, கொழும்பு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். மாதாந்த வேதனம் ரூபா 100/-. 344

**தட்டெழுத்தாளர்**
**கட்டிட மேற்பார்வையாளர்**

ஆங்கில தட்டெழுத்து தெரிந்த பெண்ணும், கட்டிட வேலை மேற்பார்வையாளரும் தேவை. விபரங்களுக்கு சப்ளேஸ் அன்ட் இன்வெஸ் மென்ஸ், 2-ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 346

**WANTED**

Wanted a Lady Clerk with good knowledge of Engliah. Book-keeping knowledge an advantage. Unitied Institutes, Nelliady, Karaveddy. 325

### காணவில்லை

**சூட்கேஸ்**

11-5-66 திகதிம் பிற்பகல் 6-45 க்குக் கொழும்பில் இருந்து வந்த மெயில் றெயினில் 3 விசாவும் 3 பாஸ்போட்டுகள் உடுப்புக்களும் அடங்கிய பெட்டியைக் காணவில்லை. கண்டெடுப்பவர்கள் S கருப்பசாமிநாயுடு7/2றெயில்ரேட் கந்தர் மடம், யாழ்ப்பாணம் என்ற விலாசதாரிடம் சேர்ப்பித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 342

### வைத்தியம

தொய்வு, கசம் நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

**காணி**

உடுவில் கிராமசபை எல்லைக்குள் லவ்லேனில் (Love Lane) 9 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். சரவணமுத்து, யூனியன் பேக்கறி, சாவகச்சேரி. 332

**குளிர்சாதனப் பெட்டி**

ஆறு கன அடி குளிர்சாதனப் பெட்டி (Frigidare English) விற்பனைக்குண்டு. விபரம் 546, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 339

**லொறி மரபொடி**

பாவித்த ஒஸ்டின் 3 1/2 டொன் லொறி மரபொடி மட்டும் விற்பனைக்குண்டு. மில்க் வைற் சோப்தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 343

**கார்**

வான்காட் ஸ்ரான்டட் டெனன்ற் (Vangurd standard Denant) 2 ஸ்ரீ 6721 இலக்கமுடைய நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. டயர்கள் ஐந்தும் பற்றறியும் புதியன. ஒரு கலனுக்கு 36,—38 கட்டைவேலை செய்யும். ரொலரூம்ஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7099. 340

## பம்பாய் வெண்காயம் தாராளமாகக்கிடைக்கும்

கொழும்பு, சனி

போதியளவு உணவுப் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதியாகியுள்ளன. இவற்றுள் 1523 தொன் பம்பாய் வெண்காயமும் வந்திருக்கின்றன.

## கார் விபத்தில் உதவி மந்திரி

கொழும்பு, சனி

ராஜாங்க உதவி மந்திரி திரு. டி. பி. அத்தபத்து கார் விபத்தொன்றில் சிக்கியதன் காரணமாக இடது கையில் முறிவு ஏற்பட்டு கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்ற திங்கட்கிழமை மாலை 6மணியளவில் கொழும்பிலிருந்து தமது தொகுதிக்குக் காரில் சென்றுகொண்டிருந்தபோது பம்பலப்பிட்டியில் காலி வீதிவழியாக எதிரே வந்துகொண்டிருந்த கார் திடீரென வலது கைப்பக்கம் வந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது [illegible] உதவி மந்திரி தெரிவித்துள்ளார்.


“ லேடன் ” LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- ரெறி சேட்
- ரெமி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.






லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

★ அவை, பூரண சக்தியுடன தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை

★ லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான . அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப் பட்டவை.

★ லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவ்ரடி லக்ஷபான ... (?)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய

# திரைப்பட ஏற்றுமதியாளர் இலங்கை வருவர்

## தமிழ் சினிமாப் படம் பற்றி பரிசீலிப்பார்கள்

சென்னை, மே 14

**இலங்கைக்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்கும், ஆபிரிக்க நாடுகள் சிலவற்றிற்கும் இந்திய திரைப்பட ஏற்றுமதியாளர் தூதுகோஷ்டி ஒன்று விஜயம் செய்யவிருக்கிறது.**

சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய பட ஏற்றுமதியாளர் கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது. வர்த்தக அமைச்சின் ஏற்றுமதி அபிவிருத்தி ஆலோசகர் திரு. எச். சீதாராமரெட்டி தலைமையில் தென்னிந்திய சினிமாப்பட ஏற்றுமதியாளர்களின் கூட்டம் இங்கு நடைபெற்றது.

இலங்கைக்கும், இதர தென்கிழக்காசிய நாடுகளுக்கும் தமிழ் சினிமாப் படங்களை ஒருமுகப் படுத்தி, ஏற்றுமதி செய்யும் வழி வகைகள் கூட்டத்தில் ஆராயப்பட்டன

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு படங்களை விற்பனை செய்வதற்கு இந்திய சலனப்பட ஏற்றுமதி கார்ப்பரேஷன் ஏஜெண்டாக பொறுப்பேற்கப்படவேண்டும் என அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்வதென கூட்டம் தீர்மானித்தது. (பி. டி. ஐ)


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
எம்.ஆர். ராதா-எம்.என். ராஜம் நடித்த
ரத்தக் கண்ணீர்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி—விஜயகுமாரி நடித்த
"பச்சை விளக்கு"

REGAL—JAFFNA
NOW SHOWING!
Ian Hendry
June Ritchie
in
Live Now Pay Later


## அரசாங்கத்தின் உதவி

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை பட்டினத்திலுள்ள கழிவுப் பொருட்களை பட்டின எல்லைக்கு அப்பால் எடுத்துச் செல்வதற்கு டிராக்டர் ஒன்றை வாங்குவதற்கு ஸ்தலஸ்தாபன கடன் அபிவிருத்திப் பணத்திலிருந்து 20,000 ரூபா வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

---

டோக்கியோ, மே. 14

டோக்கியோ நகரின் மொத்த ஜனத்தொகை 1 கோடியே 10 லட்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி


## நாகர்களே காரணம்

புதுடில்லி, மே 14

வடகிழக்கு எல்லை ரயில்வேயில் சமீபத்தில் நடைபெற்ற ரயில் வெடிப்புகளுக்கு தலைமறைவு நாகர்களே காரணம் என்றும் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தம் உபயோகிப்பதே அவர்கள் நோக்கம் என்றும் அறிவிக்கப்பட்டது.

2-வது வெடி விபத்து, முதல் விபத்தைவிட பெரிதாக இருந்தது என்றும், 3 வதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. குண்டு இன்னும் பெரிதாக இருந்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டில் செய்யப்பட்ட இக்குண்டுகள் பாகிஸ்தானிலிருந்து நாகர்களுக்கு கிடைத்தது எனவும் 6 பேர் இதுசம்பந்தமாக கைது செய்யப்பட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

பார்லிமெண்டுக்கு வரும் கேள்வி

# பயிற்றப்பட்ட ஆசிரியர் சம்பளம்:

## கல்வி மந்திரியிடம் மூதூர் எம். பி. கேட்பார்

கொழும்பு, சனி

''பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரேயளவான சம்பள விகிதத்தையளிப்பதற்கு கல்வி மந்திரி நடவடிக்கை எடுப்பாரா?'' என இம்மாதம் 20-ந்தேதி பார்லிமெண்ட் கூடும்போது மூதூர் எம் பி தரு எம் ஈ எச் முகமது அலி கல்வி கலாச்சார மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லையிடம் கேட்கவிருக்கிறார்.

திரு முகமது அலி கல்வி மந்திரிடம் கேட்பதற்காக முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட கேள்விகள் வருமாறு:

பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியரகளுக்கும், பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கும் தற்பொழுது மூன்று வித்தியாசமான சம்பள அளவுத் திட்டங்களுள்ளனவென்பதை அவர் அறிவாரா? அதனை நீக்கி சகல பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஒரேயளவு சம்பளத் திட்டத்தை ஏற்படுத்துவாரா? ஆமெனில் எப்பொழுது? அன்றேல் ஏன்?

அதேதினத்தில் நியமன எம் பி சர் ரசீக் பரீத் வர்த்தக அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்பதற்காக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

### கூட்டுறவு மொத்தவிற்பனவு

பல்வேறு பொருட்களுக்கென இன்றுவரைகூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள இறக்குமதி உத்தரவுப்பத்திரங்களின் மொத்தப் பெறுமதி யாது?

தனியார்துறைக்கு வழங்கப்பட்ட இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களின் மொத்தப்பெறுமதியென்ன?

'குத்தடா' என்றதும் திரும்பிப்பார்த்தேன்

# முதலாம் எதிரி தகப்பனுரை கத்தியால் குத்துவதை கண்டேன்"

## இராமநாதபுரம் கொலை,பெண் கடத்தல் வழக்கில் மகன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராமநாதபுரத்தைச்சேர்ந்த வைரவநாதன் ஆறுமுகத்தைக் கொலைசெய்ததாகவும், அவரது மகளைக் கடத்திச்சென்றதாகவும் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று இரண்டாம் நாளாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யு தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், வைத்திலிங்கம் தனுஷ்கோடி, கதிரவேலு நடராசா, கதிரவேலு குணசிங்கம், வைத்திலிங்கம் சண்முகம், ஜோசெப் ஞானப்பிரகாசம், ஜோசெப் வரப்பிரசாதம் ஆகிய அறுவர்மீதும் ஆறுமுகத்தின் மகள் பூரணத்தைக் கடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. முதலாம் எதிரியான வைத்திலிங்கம் தனுஷ்கோடிமீது ஆறுமுகத்தைக் கொலைசெய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் விசாரணையின்போது காலஞ்சென்றவரின் மகன் ஏ சண்முகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

5-10-64 அன்று எனது இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு விருந்தையில் கட்டிலில் படுத்தேன். ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு ஒரு கார் எங்கள் படலையடியில் நிமித்தப்படும் சத்தத்தைக் கேட்டேன். நான் உடன் எழுந்து பார்த்தேன். முதலாமெதிரியும், இரண்டாம் எதிரியும், அவர்களுக்குப் பின்னால் மூன்றும், நான்காம் எதிரிகளும் பின்னும் மூன்று நான்கு பேரும் எங்கள்வீட்டுக்குள் வருவதைக் கண்டேன். 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று முதலாம் இரண்டாம் எதிரிகளிடம் கேட்டேன். சத்தம் போடவேண்டாமென்று சொல்லி முதலாம்எதிரி என் நாடியில் அறையொன்று கொடுத்தார். நான் தோட்டத்துக்குள் ஓடிச்சென்று ஒரு தடியொன்றை எடுத்துக்கொண்டு படலைக்கு வெளியால் வந்தபோது, எனது தங்கையை இருவர் தூக்கிக்கொண்டுவருவதைக் கண்டேன். இதனைக் கண்டுவிட்டு நான் கார் கண்ணாடியை அடித்துடைத்துவிட்டு பயத்தினால் இராமநாதருடைய வளவுக்குள் ஓடினேன், முதலாமெதிரியும் இன்னுமிருவரும் தகப்பனுரைப் பின்தொடர்வதைக் கண்டேன். 'ரோச்லைட்'டின் உதவிகொண்டு இதனைப் பார்த்தேன். 'குத்தடா', என்று சொல்லும் சத்தம் கேட்டது. உடனே திரும்பிப் பார்த்தேன். முதலாம் எதிரி எனது தகப்பனுரைக் குத்துவதைக் கண்டேன். அது கத்தியோ, கிறிசோ என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது.

நேற்றைய விசாரணையில் ஏ சண்முகத்தை அட்வக்கேட் ரி கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தார். இதனையடுத்து நீதியரசர் சாட்சியைப் பார்த்துக் கேட்டார்.

நீதியரசர்: உனது சகோதரியை யார் தூக்கிச் சென்றார்களென்று கூற முடியாதா? — ஆம்.

மீண்டும் விசாரணை இன்று காலை 9-15 க்கு ஆரம்பமாகும்.

ந. நி.

# நேரத்துக்கு சம்பளம் இன்றேல் 10 சதவிகிதம் அதிக சம்பளம்

## முதலாளிகளை கட்டுப்படுத்த புதிய திருத்தச்சட்டம்

கொழும்பு, சனி

கடை, காரியாலய ஊழியர்களுக்கான திருத்தச்சட்டம் விரைவில் அமுலுக்கு வரவிருக்கிறது.

பௌர்ணமி முழுநாளும், அதற்கு முதல் நாள் அரை நாளும் கடைகளை மூடுவதற்கான சட்டத்தை புறக்கணிக்கும் முதலாளிகளையும், நேரத்திற்கு சம்பளம் [illegible] முதலாளிமார் [illegible] 10 சதவிகிதம் அதிகச்சம்பளம் கொடுக்க வழிசெய்வதற்கும் இச்சட்டம் வழிவகுக்கும்.

கடை, ஹோட்டல் ஊழியரின் ஆகக்குறைந்த சம்பளமும் நிர்ணயிக்கப்படவிருக்கிறது.

திருத்தச்சட்டம் முதலில் கொழும்பில் அமுல் நடத்தப்பட்டு, படிப்படியாக இதரபகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

## மிதமிஞ்சிய கள் உயிரைக் குடித்தது

வல்வெட்டித்துறை, சனி

தொண்டைமானாறைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பரின் மகனான ஜெயசீலன் என்னும் 2 வயதுச் சிறுவன் தண்ணீர் விடாய் காரணமாக வீட்டில் இருந்த பனங்கள்ளை அளவுக்கு மிஞ்சி அருந்தியதன் காரணமாக மூச்சுத் திணறி மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. வி. பி. இராசரத்தினம் கள் அதிகம் அருந்திய காரணத்தால் மூச்சுத் திணறி மரணம் சம்பவித்ததென தீர்ப்பளித்தார்.

## அரைச்சலார்

கொழும்பு, சனி

கூட்டுறவு ஆஸ்பத்திரிகளில் இருந்து அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு ஏக்ஸ்றே சோதனைக்காக செல்லும் நோயாளர்களிடமிருந்து அரைச்சலார் வாங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## திருநாவுக்கரசனுர் குருபூசை

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் முதல் தடவையாக திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை கொண்டாடப்பட்டது. வித்துவான் வேந்தனுரின் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெற்றது.

O

கோண்டாவில், சனி

திருநாவுக்கரசரை சமயகுரவர்களில் ஒருவராக்கிய பெருமை திலகவதி அம்மையாரையே சாரும். நாவுக்கரசர் தமக்குநேர்ந்த இடர்களை சிவசக்தியால் தாங்கினுர் என இணுவில் சைவ மகாஜன கல்லூரி மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு வ நடராசா தலைமையில் நடைபெற்ற திருநாவுக்கரசுசுவாமிகளின் குருபூசை விழாவில் திரு த கந்தையா கூறினுர்.

O

யாழ்ப்பாணம், சனி

சாந்தைமடம் கூட்டுப் பிரார்த்தனைச் சபையாரால் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயத்தில் திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை நடத்தப்பட்டது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org